பக்கங்கள்:10
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 22 வெள்ளிக்கிழமை 04.02.2022 கதிர் 91

**இது ரகசியம் அல்ல!**

நாட்டின் சுதந்திர தினம் இன்று. இங்கு தமிழர்களுக்கு சுதந்திரம் இல்லை என்பதைக் காட்டுவதற்கான முஸ்தீபுகளில் இன்று தமிழர் தரப்பு இறங்கியுள்ளது.

ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் குருந்தூர் மலைக்கு இன்று காலை 6 மணிக்கு 2

# மீனவர்களின் போராட்டக் களத்தில் சுமந்திரன்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக பருத்தித்துறை – சுப்பர்மடத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் நேற்று நேரில் ஆதரவு தெரிவித்தனர்.

இதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்துகொண்டார்.

இவர்கள் மூவரும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியமையுடன் பொலிஸாரால் நீதிமன்றத்தினூடாகப் பெறப்பட்டுள்ள போராட்டக்கான தடை உத்தரவு தொடர்பிலும் கலந்துரையாடினர்.

இதன்போது சுமந்திரன், சாணக்கியன் 2

# சீறிப் பாய்ந்த டக்ளஸுடன் முரண்டு பிடித்த மீனவர்கள்

## போராட்டக் களங்களில் நேற்றுப் பதற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்ரவரி. 04

மீனவர்களின் தொடர் போராட்டக் களங்களுக்குச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த கூற்றை மீனவர்கள் ஏற்க மறுத்தமையால் மீனவர்கள் மீது டக்ளஸ் கடும் சீற்றத்துடன் பாய்ந்தார். இதையடுத்துக் கொதிப்படைந்த மீனவர்கள், அமைச்சருடன் முரண்டு பிடித்தனர். 2



# தமிழ்த் தேசத்தின் கரிநாளான இன்று முள்ளிவாய்க்காலில் அணிதிரள்வோம்

## சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாக அழைப்பு




(இ.கலையமுதன்)

இலங்கையின் சுதந்திர நாள் 'தமிழ்த் தேசத்தின் கரிநாள்' எனும் தொனிப்பொருளில் இன்று முள்ளிவாய்க்காலில் மாபெரும் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாக 07

# ரஞ்சனுக்கு விடுதலை கிடைக்குமா?



சிறைத் தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பு வழங்குமாறு எமக்கு 2

# மீனவர்கள் விடுதலை ஒத்திவைப்பு

(ந.லோகதயாளன்)

இந்தியக் கடற்பரப்புக்குள் வைத்து அந்நாட்டுக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட வடமராட்சி மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்படவிருந்த நிலையில் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

வடமராட்சியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 07

# தடையால் கொட்டகைகளை மாத்திரம் அகற்றிவிட்டுத் தொடரும் போராட்டம்!

(ந.லோகதயாளன்)

நீதிமன்றத் தடை உத்தரவை அடுத்து பருத்தித்துறை – சுப்பர்மடம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் அகற்றப்பட்டபோதும் மீனவர்களின் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கு எதிராகவும், வடமராட்சி கிழக்கு கடலில் மீனவர்கள் இருவர் உயிரிழந்தமைக்கு நீதி கோரியும் சுப்பர்மடத்தில் தொடங்கப்பட்ட போராட்டம் 4ஆவது நாளாக நேற்றும் முழு வீச்சுடன் இடம்பெற்றது.

பிரதான வீதியை 07

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரிக்கை

## மக்கள் கையெழுத்துப் போராட்டத்தை தொடக்கி வைத்தார் சுமந்திரன் எம்.பி.

(ந.லோகதயாளன், ச.தவசீலன்)

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரி பொதுமக்கள் கையெழுத்துப் போராட்டத்தை முல்லைத்தீவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற 07



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பக்திப் பவனி. அலம்பில் சந்தியில் இருந்து ஆரம்பிக்க ஏற்பாடு.

"அரசுத் தரப்பு அனுமதிக்குமா? வழிமறிக்குமா? தடை விதிக்குமா?" – என்று முக்கிய அரசியல் நண்பர் ஒருவரிடம் கேட்டேன்.

"அனுமதித்தால் வழிபாடு. வழிமறித்தால் அரசியல்" – என்றார் அந்த நண்பர்.

"சுமந்திரன், சாணக்கியன், சிறிதரன் எல்லோரும் களத்தில். போதாக்குறைக்கு நீங்கள் அடிக்கடி 'பயர் பிராண்ட்' அரசியல்வாதி என்று சிலாகிக்கும் சிவாஜிலிங்கம் போன்றோரும் இணைகின்றனர். அரசியல் சுவாரஸியத்துக்குப் பஞ்சமிருக்காது." – என்றார் அவர்.

இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

"இலங்கைப் படைகளை – அவற்றின் வீர, தீர, தியாகங்களைப் போற்றும் – அவர்களின் சுதந்திர தினத்துக்கு, தந்தை செல்வநாயகம் காலத் தீர்மானத்தை மறந்து – அதனைக் கரிநாளாக அனுஷ்டிக்கும் முடிவை மாற்றி – அந்த சுதந்திர தின நிகழ்வில் பட்டுவேட்டி சட்டையோடு போய் அமர்ந்து, நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தினார் சம்பந்தன். ஆனால் அவர் நம்பிக் கொண்டு வந்த நல்லாட்சி அரசும் கூட தமிழர்களின் காலை வாரி விட்டு விட்டது. அந்த சுதந்திரனதின நிகழ்வுக்கு 'பொப்பி' மலர் குத்திப் போன சுமந்திரனை சுகந்திரதினத்தன்று கறுப்பு உடை அணிந்து தமிழரின் கரிநாள் போராட்டத்துக்கு முன்னிலை வகிக்கப் பண்ணி விட்டது தென்னிலங்கைப் பேரினவாதம். பார்த்தீர்களா?" – என்றார் அவர்.

"உண்மைதான்" என்றேன் நான்.

தென்னிலங்கை அரசியலையும் ஒட்டி ஒரு விடயத்தைச் சொன்னார் அவர்.

விவசாயத்துறை அமைச்சராக மஹிந்தானந்த அளுத்கமகே நியமித்தார்கள். வழமையாக விவசாய அமைச்சர் விவசாயிகளின் வரவேற்புக்குரிய தலைவராவார். ஆனால் இந்த ஆட்சித் தலைவரின் வேலையால் விவசாயிகள் இன்று விவசாய அமைச்சரை எதிரியாகப் பார்க்கின்றனர். தமது முப்பது வருட அரசியல் வாழ்க்கை இந்த விவசாய அமைச்சர் பதவியால் நாசமாகி விட்டது என்று புலம்புகின்றார் மஹிந்தானந்த அளுத்கமகே. அதுபோல கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைமை வந்தாலும் ஆச்சரிப்படுவதற்கில்லை. இங்குள்ள தமிழ் மீனவர்களுக்காக தமிழக மீனவர்கள் பகைக்குமாறு நடந்து கொண்டார் கடற்றொழில் அமைச்சர் தேவானந்தா. இந்தியாவின் நல்ல புத்தகத்தில் அவரின் பெயரில்லை. அப்படி அந்தப் பக்கத்தில் எல்லாம் தமது பெயரை இங்குள்ள மீனவர்களுக்குக்காகக் கொடுத்துக் கொள்ள அவர் பின்நிற்கவில்லை. ஆனால் இப்போது வடக்கிலும் குழம்பி முரண்பாடு முற்றும் நிலைமை. இந்த ஜனாதிபதியுடன் சேர்ந்தால் கடல் தொழிலாளர்களின் அமைச்சர் கடல் தொழிலாளர்களுக்கு எதிரியாக வேண்டி வரும். சுகாதார அமைச்சருக்கோ மருத்துவர், தாதியர் எதிரியாகி விடுகின்றனர். ரயில்வே தொழிற்சங்கங்கள் போக்குவரத்து அமைச்சருக்கும், மின்சார சபைத் தொழிற்சங்கங்கள் சக்தி வலு அமைச்சருக்கு எதிராகவும் கொதிக்கும் நிலைமை. ஒட்டு மொத்தத்தில் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் அமைச்சர்களாகித் தத்தமது துறையினரின் எதிர்ப்புகளைச் சந்தித்து, செல்வாக்கில் அடிபட்டுப் போவதுதான் நாட்டின் நிலைமை போலும்." – என்றார் அவர்.

அவர் கூறுவதிலும் ஏதோ உண்மை பொதிந்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் வாசகர்களே...!

★ ★ ★

பொருளாதார ரீதியில் துவண்டு கிடக்கும் அரசு, சீனாவும், இந்தியாவும் வழங்கும் அவசரக் கடன் உதவிகளை வைத்துக் கொண்டு, வீழ்ந்தும் மீசையில் மண்படவில்லை என்று காட்ட முனைகின்றது.

அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை. நாடு நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது.

ஆனால் மாகாணம் தோறும் பெரும் பொதுக் கூட்டங்களைக் கூட்டி அரசின் சிறப்பை – செயற்றிறனை – பறை தட்ட ஆளும் கட்சி முடிவு செய்திருக்கின்றதாம்.

அரசியல் சாணக்கியர் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் திட்டம் இதுவாம். அந்த வரிசையில் வார இறுதியில் முதல் கூட்டம் அநுராதபுரத்திலாம்.

மக்களை பஸ்களில் ஏற்றி இறக்கிப் படம் காட்டப் போகின்றார்கள் போலும்.

என்னைக் கேட்டால், இந்தத் தந்திரம் எல்லாம் தென்னிலஙகை வாக்காளர்களுக்கு மீண்டும் காதில் பூச்சுற்றுவதற்குப் போதுமானதல்ல என்பேன்.

மொட்டுத் தரப்பின் இறங்குமுகம் மாறி ஏறுமுகமாவதற்கு வாய்ப்புகள் மிகமிகக் கம்மி. அதுதான் நிலைமை.

– மின்னல் –

---

## சீறிப் பாய்ந்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுக் காலை முதல் யாழ். மாவட்ட செயலகம் முன்பு இடம்பெற்ற போராட்டத்துக்கு மாவட்ட செயலாளர் சகிதம் வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வாக்குறுதிகளை மீனவர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். எனினும், மாலை போராட்டத்தை மீனவர்கள் நிறைவு செய்தபோது தமது போராட்ட வடிவம் மாறும் எனத் தெரிவித்தனர்.

இதேநேரம் பருத்தித்துறை – சுப்பர் மடம் பகுதியில் மீனவர்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்குக் கடும் பாதுகாப்புடன் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் மீனவர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டதோடு கேள்விகளையும் எழுப்பினர். இதன்போது ஆத்திரமடைந்த அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா கடும் சீற்றத்துடன் எழுந்து மீனவர்களை அச்சுறுத்தினார். உடனே கொதிப்படைந்த மீன வர்கள், அமைச்சருடன் முரண்டு பிடித்தனர்.

அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்களும் விசேட அதிரடிப்படையினரும் சூழ்ந்து அமைச்சரை அங்கிருந்து பாதுகாப்பாகச் கொண்டு சென்றனர்.

---

## மீனவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மற்றும் சுகாஷ் ஆகியோர் ஊடகங்களுக்குக் கருத்துக்களையும் வெளியிட்டனர்.

இந்தச் சந்திப்பில் பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை நகர சபையின் தலைவர் யோ.இருதயராஜா, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஊர்காவற்துறை கர்ப்பிணிப் பெண் கொலை; ஐந்து வருடங்களின் பின் சந்தேகநபர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

ஊர்காவற்துறைப் பகுதியில் கர்ப்பிணிப் பெண்ணொருவரை அடித்துப் படுகொலைசெய்த பின்னர், நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் ஐந்து வருடங்களின் பின்னர் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் நேற்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பகுதியில் கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஞானசேகரன் ஹம்சிகா (வயது 27) எனும் 7 மாதக் கர்ப்பிணியான பெண் அடித்துக் கொலை செய்யப்பட்டு, அவரது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

அது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வந்த நிலையில் ஐந்து வருடங்களின் பின்னர் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, குறித்த கொலை சம்பவம் தொடர்பில் கொலை நடந்த அன்றைய தினமே சகோதரர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 17 மாதங்கள் அவர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படிருந்த நிலையில் மேல் நீதிமன்ற உத்தரவில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## ரஞ்சனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இன்னும் எழுத்துமூல உத்தரவு கிடைக்கப்பெறவில்லை என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சுதந்திர தினமான இன்று ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் 197 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர் .

அதற்கமைய, மஹர சிறைச்சாலையில் 20 கைதிகளும், கேகாலை சிறைச்சாலையில் 18 கைதிகளும், வெலிக்கடை சிறைச்சாலையில் 17 கைதிகளும், களுத்தறை சிறைச்சாலையில் 13 கைதிகளும் நாளை (இன்று) விடுதலை செய்யப்படவுள்ளனர்.

போகம்பறை மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலைகளிலிருந்து தலா 11 கைதிகளும், வாரியபொல சிறைச்சாலை யிலிருந்து 10 கைதிகளும் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர் – என்றார்.






# நிதியமைச்சர் பஸிலை அமெரிக்கா விசாரணைகள் செய்தல் வேண்டும்

## வலியுறுத்துகிறார் சுரேஷ்



கள்ளச் சந்தையில் டொலர்கள் வாங்கி வடகொரியாவிடம் ஆயுத கொள்வனவு செய்த தமது நாட்டு பிரஜையான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை அமெரிக்கா விசாரணை செய்து உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கறுப்பு சந்தையில் டொலர்களை வாங்கி வடகொரியாவிடம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக இலங்கையின் நிதி அமைச்சரும் அமெரிக்கப் பிரஜையுமான பஸில் ராஜபக்ஷ கூறியிருக்கின்றமை தற்போது சர்ச்சையாகியுள்ளது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் என்பது சுயநிர்ணய உரிமை, சுயாட்சி போன்றவற்றை மையமாகக் கொண்டு நடைபெற்றது. விடுதலைப் போராட்டம் என்பது பேச்சு மூலம் பேசித் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய விடயம்.

ஆனால் 2005 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு இந்த அரசாங்கம் மூர்க்கத்தனமாகப் போராட்டத்தை முன்னெடுத்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயம். யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பல கோடிகளைச் செலவிட்டு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது.

முக்கியமாக சீனாவிலிருந்தும் பாகிஸ்தானில் இருந்தும் தற்போது வடகொரியாவில் இருந்துத் ஆயுதங்களை வேண்டியதாகக் கூறுகின்றார்கள். வட கொரியாவில் இருந்து பல மில்லியன் டொலர்களுக்குக் கடன்களாக இராணுவத் தளவாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இராணுவத் தளவாடங்களின் கொள்வனவு மற்றும் கடன் என்பன தற்போது எங்கு கொண்டு வந்து விட்டுள்ளது என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஆனால், பஸில் ராஜபக்ஷவின் இத்தகைய விடயம் அன்றைய பாதுகாப்புச் செயலாளராக இருந்தவரும் அமெரிக்கப் பிரஜையாக இருக்கின்ற இன்றைய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தெரியும். அன்றைய பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இன்றைய நிதியமைச்சர் ஆகியோர் அமெரிக்கப் பிரஜையாக இருந்தவர்கள்.

அமெரிக்காவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாட்டுடன் இவர்கள் கள்ளச்சந்தை மூலம் டொலர்களைக் கடத்தி அங்கிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்தோம் என ஏற்றுக்கொள்கின்றார். நிச்சயமாக அமெரிக்க அரசு பஸில் ராஜபக்ஷவை மாத்திரமன்றி அன்றைய காலகட்டத்தில் இலங்கையை வழி நடத்திய தலைவர்களும் விசாரிக்கப்படவேண்டும்.

அன்று கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவிப்பதற்கு உதவியாக இருந்தது. யுத்தத்துக்காகக் கள்ளச் சந்தை ஊடாக வடகொரியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆயுதங்கள் என்பது ஒரு மனிதப் படுகொலைக்கும், மனித உரிமை மீறலுக்குமாக இலங்கை அரசாங்கத்தால் அப்போது பாவிக்கப்பட்டது என்பதுதான் முக்கியமான விடயம்.

ஆகவே, இத்தகைய விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் எந்தவொரு விசாரணைகளையும் நடத்தப் போகின்றமை கிடையாது. ஆனால், இவற்றை மேற்கொண்டது அமெரிக்க பிரைஜைகள் என்ற அடிப்படையிலும் இலங்கை நாடு என்பது இவர்களுடன் சம்பந்தப்பட்டது என்பதாலும் தங்கள் பிரஜைகளான பஸில் ராஜபக்ஷவை விசாரிப்பதும் இலங்கை அரசு இதற்கு ஊக்கமளித்தது சம்பந்தமாகவும் விசாரிப்பது அமெரிக்காவின் கடமையென நாம் கருதுகிறோம்.

ஆகவே, இவ்வாறான நடவடிக்கைகளைக் கடந்த காலங்களில் இரகசியமாக தாங்கள் நிறைவேற்றியதாகவும் தற்போதும் கூட நாடு வங்குரோத்து நிலையில் டொலர்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது, எதுவும் இறக்குமதி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது நாளாந்தம் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது, அரசாங்கம் எந்தவொரு பொருளுக்கும் விலை நிர்ணயிக்க முடியாது இருக்கிறது.

ஆகவே, இவ்வாறான சூழ்நிலையில் மீண்டும் கள்ளச்சந்தையில் டொலர் வாங்கலாம் என்ற சாரப்பட நிதி அமைச்சரின் கூற்று இருக்கிறது. ஆகவே, இது தொடர்பில் முழுமையான விசாரணை தேவை.

ஒரு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாட்டில் அமெரிக்கப் பிரஜையை இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா என்பதை உரிய விசாரணை செய்து அமெரிக்க அரசு உண்மைகளை தெளிவுபடுத்த வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கிறோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய படகுகளின் அத்துமீறல்களுக்கு எதிராக நான்காவது நாளாகவும் தொடரும் போராட்டம்!





இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களைக் கண்டித்து 4 ஆவது நாளாகவும் யாழ்குடாநாட்டின் கரையோரப் பகுதிகள் முற்றாக முடங்கியுள்ளமையுடன் யாழ். மாநகரிலும் ஆதரவுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கு நிரந்தரமான தீர்வு மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் இடம்பெற்ற மீனவர்கள் உயிரிழப்புக்கு நீதி ஆகியவற்றைக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 4 ஆவது நாளாக நேற்றும் முழு வீச்சுடன் இடம்பெற்று வருகின்றது.

நேற்று காலை புதிதாக மாதகலின் கரையோர பகுதி முற்றாக முடக்கப்பட்டுள்ளது. வீதியின் குறுக்கே படகுகளை நிறுத்தி போக்குவரத்தை முடற்றாக முடக்கி இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

வடமராட்சியிலிருந்து பொன்னாலை வரை நீடிக்கப்பட்ட போராட்டத்துக்கு மக்கள் பேராதரவு வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

# மஹிந்த அமரவீரவுக்கு கொரோனாத் தொற்று!



சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டவர்களில் 27 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதியாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களனி திஸ்ஸ மின்னுற்பத்தி நிலைய செயற்பாடு நிறுத்தம்

*களனி திஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*குறித்த மின் நிலையத்தில் எரிபொருள் தீர்ந்து போனதை அடுத்து இரண்டு மின் பிறப்பாக்கிகள் புதன்கிழமை இரவு முற்றாக செயலிழந்துள்ளன என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.*

*டீசல் தட்டுப்பாடு காரணமாக களனி திஸ்ஸ அனல்மின் நிலையம் மற்றும் களனி திஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையம் ஆகியவை நிறுத்தப்பட்டுள்ளன எனவும் அந்த சபை மேலும் தெரிவித்துள்ளது.*

*அதேவேளை டீசல் கையிருப்பில் இல்லாததால் மத்துகம சி.ஈ.பி. ஆலையும் புதன் இரவு வலுக்கட்டாயமாக மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

# பூஸ்டர் ஊசி பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 04

பூஸ்டர் தடுப்பூசி தொடர்பான தவறான கருத்துக்கள் நீக்கப்பட்டு வருகின்றமையால், கடந்த சில நாள்களாக பூஸ்டர் டோஸ் பெறும் நபர்களின் எண்ணிக்கையில் வியத்தகு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக காதார அமைச்சின் கொரோனா தலைமை ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் டோஸ் பற்றிய கட்டுக்கதைகள் தொடர்பாக ஊடகங்களில் நடைபெற்ற பொது விவாதத்துக்குப் பிறகு, குறிப்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பூஸ்டர் டோஸ் பெறும் நபர்களின் எண்ணிக்கையில் வியத்தகு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்கள் இறுதியாக பூஸ்டர் டோஸ் தொடர்பான தவறான எண்ணங்களைக் கைவிட்டு, படிப்படியாக பூஸ்டர் டோஸ் பெறத் தொடங்கியுள்ளனர் என்பது உறுதியளிக்கிறது எனத் தெரிவித்த அவர், மொத்த மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 40 வீதம் பேர் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் எனக் கூறியுள்ளார்.

மேலும், கொரோனா வழக்குகளின் கூர்மையான அதிகரிப்பு, பூஸ்டர் தடுப்பூசித் திட்டத்தை முடுக்கிவிடுமாறு பலரைத் தூண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் புற்றுநோயால் நாளாந்தம் 40 பேர் சாவு!

நாட்டில் புற்றுநோயால் நாளாந்தம் சுமார் 40 பேர் உயிரிழக்கின்றனர் எனத் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அந்தப் பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் இஷானி பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் 2019 ஆம் ஆண்டில் புற்றுநோயால் 31 ஆயிரத்து 848 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உலக புற்றுநோய் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இன்று கரிநாள்

இலங்கைத் தீவின் சிங்களவர் நாடு இன்று சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றது. ஆனால் இந்தத் தீவின் தமிழர்களைப் பொறுத்தவரை – அவர்களின் தேசம், தேசியத்தைப் பொறுத்தவரை – இன்றைய நாள் சுதந்திர தினம் அல்ல. அடிமைத்துவ தினம்.

தமிழர் தேசத்தின் இறைமையை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வழியாக வன்கவர்ந்த ஆங்கிலேயர்கள் அந்த இறைமையை சிங்கள தேசத்திடம் கையளித்துச் சென்ற நாள் இது.

ஆக தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களை அடக்கியாளும் மேலாண்மைத் தரப்புகளின் அதிகாரம் கைமாறிய தினம் இது. அவ்வளவுதான்.

அதுவும், தமிழர்களின் இறைமையை – அவர்களின் தேசத்தின் தனித்துவ ஆட்சி அதிகாரத்தை – முதலில் கைப்பற்றிய போர்த்துக்கேயர், அவர்களிடம் அதைப் பிடுங்கிக் கொண்ட ஒல்லாந்தர், அதன் பின்னர் அதைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் ஆகிய மூன்று தரப்புகளுடனும் ஒப்பிடுகையில் அந்த அதிகாரத்தை இப்போது கைப்பற்றி வைத்திருக்கும் சிங்கள தேசம் மிக மிக மோசமானது. மூர்க்கத்தனமானது.

போர்த்துக்யேர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் தங்கள் காலனித்துவ தேசமாக தமிழர் தேசத்தைக் கட்டி ஆண்டனரே தவிர, அதனை ஒழிக்க முயலவில்லை. தமிழர் தேசத்தைத் தங்களின் சாம்ராச்சியங்களின் கீழ் அடிமைப்பட்ட பிரதேசமாக்கி, அதன் மீதான தங்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தினரே தவிர, தமிழர் தேசத்தை – அதன் தனித்துவத்தை – அதன் இருப்பை – அழித்தொழிக்க முயலவில்லை.

ஆனால் 1948 இல் இலங்கை பிரிட்டன் சாம்ராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்று சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்ட போது, இந்தத் தீவின் அதிகாரத்தை இந்தத் தீவின் பெரும்பான்மையினர் என்ற கோதாவில் கைப்பற்றிக் கொண்ட சிங்கள பேரினவாதம் – சிங்கள தேசம் – அன்றுதொட்டு இன்றுவரையான முக்கால் நூற்றாண்டு காலம் முழுவதும் தமிழர் தேசத்தைத் தனது பெரும்பான்மை மூலம் ஆக்கிரமித்து, கபளீகரம் பண்ணி, அதை இல்லாதொழிப்பதிலேயே கங்கணம்கட்டி, வெகுமூர்க்கமாகவும் ஒரே இலக்காகவும் செயற்பட்டு நிற்கின்றது.

ஆகையினால், வெள்ளையரிடமிருந்து தமிழர் தேசத்தின் ஆட்சியதிகாரம் சிங்களப் பேரினவாதப் பெரும்பான்மையினரிடம் கைமாறிய இந்தத் தினம் தமிழர்களைப் பொறுத்தவரை சுதந்திரதினம் அல்ல. விடுதலை நாளும் அல்ல. மாறாக அடிமைப்படுத்தப்பட்ட நாள். தமிழர் தேசம் மீதான ஒடுக்கமுறையை வெளிப்படுத்தும் குறியீட்டு நாள்.

தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை இந்த அடிமைத்துவ நிலை வரவர மோசமாக்கப்படுகின்றது. யுத்தத்தின் முடிவு வரை பௌத்த – சிங்கள பேரினவாதிகளினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்கு நீதி கிட்டவில்லை. நியாயம் வழங்கப்படவில்லை. உண்மைகள் கண்டறியப்படவில்லை. போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் சுதந்திர புருஷர்களாக வலம் வருகின்றார்கள். அவர் கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தேச நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. மாறாக மகாவலி அபி விருத்தி, வனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக் களம், கரையோரப் பாதுகாப்பு அமைச்சு , தொல்பொருள் திணைக்களம், முப்படைகள் போன்றவற்றால் புதிது புதி தாக ஆக்கிரமிக்கப்பட்டு, தமிழர்களிடமிருந்து ப ல வ ந் த மாகப் பிடுங்கப்படுகின்றன. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. கொடூர, குரூர மிலேச்சத்தனமாக பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீடிக்கின்றது.

சுருக்கமாகக் கூறுவானால், தமிழர் தேசம் மீதான சிங்களவர் தேசத்தின் ஆக்கரமிப்பைக் குறிக்கும் நாளே இது. ஆகவே தமிழர்களைப் பொறுத்தவரை இன்று கறுப்பு

## படகுகளை எரித்து போராட்டத்தை தீவிரப்படுத்தும் கடற்றொழிலாளர்கள்



தமக்கு உரிய தீர்வு கிடைக்கவேண்டும் என்றும், உயிரிழந்த மீனவர்களுக்கு நீதி வேண்டியும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கடற் தொழிலாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர்.

இதன் அடுத்தகட்டமாக பொலிகண்டி ஆலடிப் பகுதியில் தமது படகுகளை எரித்து போராட்டத்தை கடற் தொழிலாளர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்திய இழுவைப் படகுகளை அனுமதிக்கக் கூடாது என்றும், உயிரிழந்த இரண்டு கடற் தொழிலாளர்களுக்கு நீதி கோரியும், அமைச்சர் இதற்கான நடவடிக்கையை எழுத்து மூலம் வழங்க வேண்டும் என்று கோரியும் போராட்டங்கள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

இதற்கிடையில் யாழ். செயலகம் நேற்று முற்றுகையிடப்பட்டதுடன், அமைச்சர் பேச்சுக்குச் சென்ற போது அந்த இடத்தில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

அதுமாத்திரமன்றி, சுப்பர்மடம் பகுதியிலும் கடற் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்தப் போராட்ட களத்துக்கும் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் கடற் தொழிலாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

எனினும், இதன்போது ஏற்பட்ட குழப்பத்தையடுத்து அமைச்சர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தப் போராட்ட களத்துக்கு அமைச்சர் சென்ற போது எஸ்ரிஎப் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் சென்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழர்களுக்கு சுதந்திரம் வழங்க சிங்கள மக்கள் முன்வரவேண்டும்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உருக்கம்




தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்கள் மக்கள் முன்வரவேண்டும் என வவுனியாவில் கடந்த 1812 ஆவது நாளாகத் தொடர்போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்கள், ‘பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவதற்கு ஜி.எஸ்.பி. பிளஸைப் பயன்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தி ஒரு கடிதம் அனுப்பியுள்ளோம். எமது பிள்ளைகள் இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டமைக்கு தற்போதைய பயங்கரவாதச் சட்டமே பிரதான காரணமாகும்.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களாகிய நாங்கள் பணத்தையோ இறப்புச் சான்றிதழையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதை நீதி அமைச்சரிடம் கூறவிரும்புகிறோம். எங்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதி வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மட்டுமே நீதி மற்றும் பொறுப்புக்கூறலை எமக்கு வழங்க முடியும்.

இதேவேளை சிங்களமக்களின் சுதந்திர தினத்தை நாம் எதிர்க்க விரும்பவில்லை. தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்களமக்கள் முன்வரவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

ஒடுக்குமுறையில் இருந்து சுதந்திரத்தை அனுபவிக்கும் விடயத்தை அவர்கள் தமிழர்களுக்கும் வழங்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளும் தமது உறவுகளுடன் மகிழ்வுடன் வாழ்வதை அவர்கள் அங்கீகரிக்கவேண்டும்.’ எனத் தெரிவித்துள்ளனர்.

## ஏ.எல். பரீட்சை தொடர்பான மனுவை நிராகரித்த நீதிமன்று!

எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை கால அட்டவணையை இடைநிறுத்துவதற்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கக் கோரிய மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வெளிப்படைத்தன்மை முன்னணியின் செயலாளர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணை செய்யாமலேயே நிராகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணாவால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தீர்ப்பை வழங்கிய நீதியரசர், மனுவில் கோரப்பட்ட நிவாரணத்தை வழங்க தமது நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சிங்கள பெரும்பான்மையினப் பிரதேசங்களாக வடக்கு, கிழக்கையும் மாற்றும் சூழ்ச்சித் திட்டம்

## ஜெனிவா கூட்டத் தொடருக்கு சம்பந்தன் எழுதிய கடிதத்தில் விவரிப்பு





வடக்கு, கிழக்கு மாகாணங்களை சிங்கள பெரும்பான்மையினப் பிரதேசங்களாக முனைப்புடன் மாற்றியமைக்கும் திட்டத்தையே இலங்கை அரசு நோக்கக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பிரதிநிதித்துவம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளின் தூதரங்களின் தூதரகத் தலைவர்களுக்கும் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 49 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் ஆய்வுக்கு எடுக்கப்படவிருக்கையில், 31 ஜனவரி 2022 திகதியிட்டு சம்பந்தன் அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:

46/1 தீர்மானத்தின் ஏற்பாடுகளுக்கமைய மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரினால் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல விளக்கத்திற்குப் பின்னர் இலங்கையின் நிலைமை ஆராயப்படும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடருக்கான ஒரு முன்னோடியாக இலங்கைப் நாடாளுமன்றத்திலிருக்கும் மிகப் பெரிய தமிழ் அரசியல் கட்சியின் (தமிழ்த் தேசிய கூட்டமைப்பு) தலைவர் என்ற வகையில் நான் இதனை உங்களுக்கு எழுதுகின்றேன்.

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் ஆயுதம் தாங்கிய இன மோதல் முடிவுற்ற ஒரு வாரத்தினுள் 2009 மே 23 ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான விஜயத்தின் முடிவில் இலங்கை அரசாங்கத்தினாலும் ஐக்கிய நாடுகளினாலும் ஏனைய பல விடயங்களோடு கூடவே பின்வருமாறு கூறும் ஒரு கூட்டறிக்கை விடுக்கப்பட்டது:-

சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கும் அமைவாக, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான தனது வலுவான கடப்பாட்டை இலங்கை மீளவலியுறுத்தியது. சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களை கையாள்வதற்கான ஒரு பொறுப்புக்கூறல் நடைமுறையின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் கோடிட்டுக் காட்டினார். அப்பிரச்சினைகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மேற்காணும் கடப்பாடுகளை கையாண்டுத் தீர்ப்பதற்கு எதுவித காத்திரபூர்வமான நடவடிக்கைகளையும் இலங்கை கடந்த பன்னிரெண்டு(12) வருடங்களில் மேற்கொள்ளவில்லை. இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2021 மாரச் மாதம் நிறைவேற்றிய 46/1 தீர்மானத்தோடு, ஏழுதீர்மானங் களை இதுவரயில் நிறைவேற்றியுள்ளது. இதனிடையே இலங்கை பெருமளவுக்கு அமுல்படுத்தப்படாத பல்வேறு கடப்பாட்டு அறிக்கைகளை விடுத்துள்ளது. பொறுப்புக் கூறல் விடயத்தைக் கையாண்டு தீர்க்காது விட்டதற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கமானது, இராணுவமயப்படுத்தல், சிவில் சமூக மற்றும் ஊடகத் துறையினர் மற்றும், குடும்ப உறுப்பினர்கள் அத்துடன், தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் ஏனையவர்கள் ஆகியோரைப் புதிதாகக் கைது செய்வதோடு கூடவே அரசியல் கைதிகளை காலவரையறையற்று தடுத்து வைத்திருத்தல், பல்வேறு அரசாங்க திணைக்களங்களின் செயல்பாடுகள் மூலமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்தம் காணிகளில் மீளக் குடியேற விடாது தடுத்தல், பாரம்பரிய கூட்டு காணி உரிமைகளையும் கால்நடைகளின் மேய்ச்சல் உரிமைகளையும் மறுத்தல், அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை கண்காணித்தலை தீவிரப்படுத்தல் ஆகியன அடங்கலாக இலங்கைத் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தமிழ் மக்களை அவர் தம் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிப்பதற்கு மேலதிகமாக, தொல்லியல் அகழ்வாரய்ச்சிகள், வன விலங்கு பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பு எனும் போர்வையில் தற்போது நடைபெற்று வரும் காணிச் சூறையாடல்தான் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற மிகவும் பாரதூரமான ஆபத்தாகும்.

பிரதேச எல்லைகளை மீள் வரையறை செய்தல் மற்றும் எதிர்காலத்தில் தமிழர் பிரச்சினையின் எந்த ஒரு தீர்வையும் அர்த்தமற்றதாக்கும் வண்ணம் வரலாற்று ரீதியான தமிழ் பேசும் பகுதிகளை சிங்களக் குடியேற்றாளர்களைக் கொண்டு குடியேற்றல் நிகழ்ச்சித் திட்டமொன்றில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த நிச்சயமற்ற நிலைமையில், தமிழ் மக்கள் தமது பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு நாட்டை விட்டுச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் நாடுகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் இச் செயற்பாடுகள், தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்டு, ஐக்கிய, பிரிபடாத இலங்கையினுள் வாழ்ந்துவரும் ஒரு மக்கள் குழுமத்தினர் என்று உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எண்ணக்கருவை தோற்கடித்து, அதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு சிங்கள பெரும்பான்மையின பிரதேசங்களாக முனைப்புடன் மாற்றியமைக்கும் எண்ணம் கொண்டவையாகும்.

46/1 ஆம் இலக்க தீர்மானம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகள் தொடர்பாக அதன் செயலாற்றுகையை மதிப்பிடுமுகமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கூடுகின்றபோது, மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான தனது கடப்பாடுகளில் இலங்கை அரசாங்கம் தவறிவிட்டதென்பதையும் அம் மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரே உறுதியான வழியாக தமிழ் தேசியப் பிரச்சினையைக் கையாண்டு தீர்ப்பதற்கு அது எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைக்குமாறு உறுப்பு நாடுகளை நான் வலியுறுத்துகிறேன்.

கலந்துரையாடல் தொடர்களில் உங்கள் கருத்துக்களை முன்வைத்து, பொறுப்புக்கூறல் மற்றும் தமிழர் தேசிய பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் ஆகியன தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளுக்கு இயைந்தொழுகுமாறு அதனை வலியுறுத்துமாறும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் ஒரு ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கைக்குள் எமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுய மரியாதையோடும் கண்ணியத்தோடும் பாதுகாப்புடனும் வாழ்வதை உறுதிப்படுத்துமுகமாக இலங்கை அரசாங்கத்தை அதன் அனைத்து வாக்குறுதிகளுக்கும் அமைவாக சரியான திசையில் நகர்வதற்கு தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ் மக்கள் உங்களைக் கேட்டுக் கொள்கின்றனர். - என்று உள்ளது.

# இலங்கைக்கு கடல்வழியாகக் கப்பல் ஒன்றில் போதைப்பொருள் கடத்திய 9 ஈரானியர் கைது!

கொழும்பு, பெப். 04

இலங்கைக்கு ஈரானில் இருந்து கடல்வழியாகக் கப்பல் ஒன்றில் 200 கிலோ போதைப்பொருள் கடத்தி வந்த 9 ஈரான் நாட்டைச் சேர்ந்தவர்களைக் கைதுசெய்து கொழும்பு கடற்படை தளத்துக்கு நேற்று (வியாழக் கிழமை) அழைத்து வந்துள்ளனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.ஏ.டி.ஏ.ரி. சுபோதவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எல்.கே.டபிள்யூ.கமல் சில்வாவின் பணிப்புரைக்கமைய மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவிலன் வழிகாட்டலில் மாவட்ட புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி ரி.ஏ.டி.ஏ.ரி. சுபோத தலைமையிலான பொலிஸ் குழுவினர் கடற்படையுடன் இணைந்து குறித்த கடல் பரப்பில் சுமார் 15 தினங்களுக்கு மேலாக இரவு பகலாகக் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த கடல்பரப்பில் ஈரானில் இருந்து 200 கிலோகிராம் போதைப்பொருளை கடத்திவந்த கப்பலைக் கடலில் வைத்து மறித்த போது கப்பலில் இருந்த சுமார் 200 கிலோ போதைப் பொருளை கடத்தல்காரர்கள் கடலில் தூக்கி போட்டுள்ள நிலையில் கடத்தல்காரர்கள் 9 பேரை கைது செய்ததுடன் அவர்கள் பாவனைக்காக வைத்திருந்த போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது.



இவ்வாறு கைது செய்தவர்களைக் கப்பலையும் நேற்று அதிகாலை கொழும்பு கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். இந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 271

### 691.இந்தியப் படைகளின் வெளியேற்றத்துக்குப் பின் விடுதலைப் புலிகளின் திட்டங்கள் எவையாக இருந்தன?

விடுதலைப் புலிகள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு மாகாண சபைகளை நடத்தத் திட்டங்கள் ஏற்படுத்தி அதையொட்டி பல செய்திகளும் வெளிவந்தன, நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பாலசிங்கத்தின் மனைவி அடேல், தான் எழுதிய 'விடுதலை வேட்கை' (The Will to Freedom) என்ற நூலில் பக்கம் 256 இல் இப்படிக் குறிப்பிடுகிறார்:-


"இந்தக் காலங்களில் நான் பாலாவிடம் தனியாகப் பேசும் வேளைகளில் அரசியல் சுதந்திரமும் நாட்டுரிமையும் மாற்று வழிகளில் பெற்றுக் கொள்வது விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கு எதிரானதா எனக் கேட்பேன். விடுதலைப் புலிகளின் கொள்கைகளுக்கு அவை முரணானவையல்ல என பாலா விளங்கப்படுத்தி, அவர்களது இலட்சியம் ஒரு சுதந்திரமான நாட்டை சுயநிர்ணய உரிமையில் நிறுவுவதே என்பார். அதற்கு சிங்கள மக்களோடு சேர்ந்து வாழ்வதென்பது பரீட்சார்த்தப்படுத்தப்பட்டு தோற்று விட்டதாக வேண்டும். விடுதலைப் புலிகள் வட கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முகம் கொடுக்க மிகத் தீவிரமாக இருக்கிறார்கள். ஆனால் அதற்கு ஏதுவாக பிரேமதாஸா முதலில் மாகாண சபையைக் கலைப்பது, அரசமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவது போன்ற முட்டுக்கட்டைகளை கவனிக்க வேண்டும். இணைந்து வாழலாமா என்பதில் விடுதலைப் புலிகளுக்கு இது தீவிரமான சோதனையாக இருக்கும். ஆனால் இந்த மாற்றுவழியை சோதித்துப் பார்ப்பதில் விடுதலைப் புலிகள் ஒன்றையும் இழந்து விடப்போவதில்லை. விடுதலைப் புலிகள் தேர்தலில் வெற்றி கொண்டால் அவர்கள் அந்த வெற்றிகளை தமிழ் தேசம் என்றும், தனித் தமிழ்நாடு என்றும் தங்களது இலட்சியத்துக்கு முன் நகர்த்திச் செல்வார்கள்.

ஆனால் பிரேமதாஸாவுக்கு விடுதலைப் புலிகளைக் கையாள அவருடையதான திட்டம் ஒன்று இருந்தது. ஆகவே அவர் மாகாண சபையை கலைப்பதிலும் அதற்குப் புதிய தேர்தல் வைப்பதிலும் காலம் கடத்தி, ஆறாம் திருத்தச் சட்டத்தை நீக்கவும் அக்கறை காட்டவில்லை.



நாடாளுமன்றத்தில் அதற்குப் பெரும்பான்மை பெற முடியாது என்ற கதைகளைத் தந்து எல்லா இன மக்களும் ஒரு தேசமாக இணக்கமாக வாழவேண்டும் என்ற தனது சித்தாந்தங்களையே எங்களிடையே இருந்த தனிப்பட்ட பேச்சு வார்த்தைகளில் போதித்தார்." - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு தமிழ் மக்கள் தங்களது தலைகளில் சுமத்தப்பட்ட அரசியலை மீளாய்வு செய்து பட்டறிவு காண வேண்டும். இந்தியா ஏற்படுத்திய ஒப்பந்தமும், 13 ஆம் திருத்தத்தின் கீழான மாகாண சபையும், இணைந்த வாழவும், அதிகாரப் பரவலையும் ஏற்படுத்தி அதிலிருந்து சுயாட்சிக்கோ




சமஷ்டிக்கோ முன்னேற வழியேற்படுத்திக் கொடுக்கும். அதற்கு துணையாக வட கிழக்கில் இந்தியப் படைகள் நிலை கொண்டிருந்தன. சிங்களப் பெரும்பான்மை இணைந்த வாழ்வுக்குத் தொடர்ந்து இடர்கள் தந்து, அது இயலாமல் போனால் சுயநிர்ணயத்துக்கான வலிமைகள் பாலசிங்கம் கூறிய மாதிரி எழும். அதனை இந்தியாவே தனது ஆளுமையால் நிலை நிறுத்தியிருக்கும்.

பொதுவாகப் போரினால் களைப்புற்றிருந்த தமிழ் மக்கள் இதனை நடைமுறைப் படுத்தி முன்னேற விரும்பினார்கள். விடுதலைப் புலிகள் தமிழ் ஈழ இலட்சியத்திற்காகப் போராடவென இதனை எதிர்க்கத் தொடர்ந்து நடந்தவை வரலாறுகளாகின. விடுதலையின் ஏகோபித்த தலைமையும் உரிமையும் முள்ளிவாய்க்காலில் முடிந்தது.

பிரேமதாஸா விடுதலைப் புலிகளை வசப்படுத்திப் பாவித்து இந்தியப் படைகளை வெளியேற்றினார். அது நடந்து முடிந்ததும் சிங்கள பேரினவாத திட்டங்கள் வகுத்தார். அவற்றால் விடுதலைப் புலிகள் அவரில் நம்பிக்கை இழந்தார்கள். அவரும் அவர்களை ஒதுக்கினார்.

35 வருடங்களின் பின் தமிழ்த் தரப்புக்கள் ஒரு ஒத்த நிலைப்பாட்டில் 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தித் தருவதற்கு சமர்ப்பணம் கொடுக்க மாகாண சபைமுறை இடைக்காலத் தீர்வும் ஆகாது. சமஷ்டி, தமிழ்த் தேசம் என்று விடுதலைப் புலிகள் போல (இந்தியப் படைகள் நிலை கொண்டிருந்த காலத்தில்) திலீபனது நினைவிடத்திலிருந்து பவனி புறப்பட்டிருக்கிறார் கஜேந்திரகுமார். திரும்பவும் தமிழ் மக்களின் விதி, இந்தக் காலசக்கரங்களில் தனிமனித அகங்காரங்களில் உருளுகிறது.

### 692.பிரேமதாஸாவின் திட்டம் எதுவாக இருந்தது?

காலவரைபடி 1 மார்ச் 1990 இல் வரதராஜபெருமாள் சுதந்திர ஜனநாயகத் தமிழீழக் குடியரசு தீர்மானத்தை வடக்கு, கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றி, அவரும் இந்தியப் படைகளும் அவர்களுக்குத் துணையாகப் போராடிய விடுதலைப் போராளிகளும் 27 மார்ச் 1990 நாட்டை விட்டு வெளியேறினர். வரதராஜப்பெருமாள் செய்த தீர்மானம், அதன் விளைவுகள் பற்றிப் பின்னர் ஆராயலாம். முதலில் பிரேமதாஸாவின் திட்டங்கள் பற்றி அடேல் பாலசிங்கம் தனது புத்தகத்தில் 257, 258 ம் பக்கங்களில் குறித்திருப்பவையை பார்க்கலாம். அது பின்வருமாறு உள்ளது:-

"பிரேமதாஸாவின் இரகசிய வியூகங்கள் அவரது வெளிநாட்டு மந்திரி ஹமீத் பாலாவுடனான ஒரு தனியான சந்திப்புக்காக எங்களது விடுதிக்கு வந்தபொழுது புரியக்கூடியதாக இருந்தது. மே மாதத்தின் அனல் கொளுத்தும் வெய்யில் நாள். பேச்சுக்களும் காரசாரமானவையாகத்தான் இருந்தன. உணர்ச்சிகளை எழுப்புவனவாக இருந்தன. ஹமீத் தான் பிரேமதாஸாவுக்கு இருக்கும் கவலைகளையும் ஆதங்கங்களையும் வெளிப்படுத்துகிறார் எனக் கூறி விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களைக் களைவது பற்றியும், எல்லாக் கட்சிகளும் - ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட - ஒரு சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலில் பங்கெடுப்பது பற்றி பிரஸ்தாபித்தார். விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களுடன் மேலதிகாரம் செலுத்தும் வரையில் அப்படியான தேர்தலுக்கு சாத்தியமில்லையென்றும், விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களைக் களைவது புதிய தேர்தலை நடத்துவதற்கு தேவையானது என்பது பிரேமதாஸாவினது மாத்திரமல்ல பல மந்திரிகள் - முக்கியமாக ரஞ்சன் விஜயரத்தினவினதும் கூட - என்றும் அவர் மென்மையாக, ஆனால் ஆணித்தரமாக கூறினார். அதற்குப் பாலா, இவற்றை ஏன் பிரேமதாஸா தங்களுடைய தனிப்பட்ட பேச்சுக்களில் எடுக்கவில்லை எனவும், ஆயுதங்களைக் கையளிக்கக் கேட்பது நடைமுறைப்படுத்தக் கூடியதல்ல, ஏனெனில் மாகாணசபையே கலைக்கப்படவில்லை, ஆறாம் திருத்தச் சட்டமும் நீக்கப்படவில்லை, மாகாண சபை முறை ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை, ஆனால் அவர்கள் மாகாண சபைத் தேர்தல்களை ஏற்றுக்கொண்டமை இடைக்கால ஒழுங்காகவே ஒழிய, நிரந்தரமானதாக அல்ல, நாங்களும் சமாதானத்தையும் இணக்கமான வாழ்வையும் சிங்கள மக்களுடன் வாழவே விரும்புகிறோம், அதற்காக ஜனநாயக கட்டமைப்புக்களை ஏற்படுத்தி ஜனநாயக அரசியல் நடைமுறைகளில் பங்குபற்ற விரும்புகிறோம், அரசாங்கம் ஒரு சுதந்திரமானதும் நீதியுமான தேர்தலை நடத்த அதில் எல்லாக் கட்சிகளும் பங்குபற்ற நாம் ஒத்துழைப்போம், நாம் அதில் வெற்றி பெற்று மக்களின் பிரதிநிதிகளாகி விட்டால் பின் நிரந்தர சமாதானம், எமது மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு என்பன பற்றிப் பேசலாம் என்றார் பாலா. அப்போது பாலா கிண்டலாக பாதுகாப்புக்காகவும் நிர்வாகத்திற்காகவும் பொலிஸ் பகுதிகள் அமைக்கப்படும் காலத்தில் ஜனாதிபதி விடுதலைப் புலிகளிடம் தற்சமயம் இருக்கும் ஆயுதங்களில் பார்க்கக் கூடக் கொடுக்க வேண்டி வரும். அதுவும் புலிகளின் கைளில்தான் பாரப்படுத்தப்படும் எனக் கூறினார். ஆக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிப்பது என்பது அவர்களுக்கு மேலதிகமான ஆயுதங்களை வழங்குவதாகும். அது விடுதலைப் புலிகளை மேலும் ஆயுதங்களால் பலப்படுத்துவதில்தான் முடியும் என முடிந்தது. ஹமீத் மிகவும் விரக்தியுடன் சோர்வுற்றவராக எமது விடுதியிலிருந்து வெளியேறினார்." - என்று உள்ளது.

இவற்றிலிருந்து பிரேமதாஸா விடுதலைப் புலிகளை எதிர்க்கத் தயாராகிறார். ஆறாம் திருத்தச் சட்டத்தை நீக்க விரும்புபவராக இல்லை என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

அவர்களுடைய வியூகத்தில் அரசியல் தீர்வொன்றை ஜனநாயக தேர்தல் மூலம்



நடத்தக்கூடிய அதுவும் தங்களின் அனுசரணையின்றியோ அல்லது மீறியோ செய்யக் கூடியவர்களைக் குறி வைத்தனர்.

ஆனால் தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் புலம்பெயர் வந்தடைந்து இன்று சமஷ்டிக்காக செருப்பு மாலைகள் போடுவதும், சப்பாத்துக் கால்களால் பகிரங்க அவமதிப்புக்கள் செய்வதும், என்ன வகையான பலன்களைத் தரும் என விடுதலைப் புலிகளே எடுத்த முடிவுகளில் இருந்து தெரிந்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாட்டிலுள்ள எமது உறவுகள் வாழ சாமர்த்தியமான வழிகளை அமைக்க வேண்டும்.

(வளரும்)



# கடற்தொழில் அமைச்சரின் சமரச முயற்சி தோல்வியில்; தொடர்ந்தும் முற்றுகைக்குள் யாழ். மாவட்ட செயலகம்!

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று மீனவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டக் களத்துக்குக் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகச் சென்று மீனவர்களுடன் பேச்சுக்களை நடத்த முயற்சித்த போது, மீனவர்கள் சமரசத்துக்கு சம்மதிக்காத நிலையில் அமைச்சர் திரும்பிச் சென்றார்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரும் இந்தியப் படகுகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவை எழுத்துமூலமாகத் தர வேண்டும் என மீனவர்களால் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.



இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எழுத்துமூலமான உத்தரவாதம் தர முடியாது எனவும், தான் வாய்மூல உத்தரவாதத்தையே தர முடியும் எனவும் கூறியதை மீனவர்கள் ஏற்க மறுத்தனர்.

அதனால் போராட்டக் களத்தில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியேறிய நிலையிலும் மீனவர்களின் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் தொடக்கி வைத்தார். அங்கு ஊடக சந்திப்பையும் அவர் நடத்தினார்.

இதில் நடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், எஸ்.சுகிர்தன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரிய கையெழுத்துப் போராட்டம் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிகவும் மோசமான சட்டமாக இருக்கின்றது. இது 6 மாத காலத்துக்கு தற்காலிக சட்டமாகக் கொண்டுவரப்பட்டது. ஆனால், 42 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கின்றது. விசேடமாக தமிழ் இளைஞர்களை நசுக்குகின்ற – ஒடுக்கி ஆழ்கின்ற சட்டமாக, சர்வதேச விழுமியங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளிச் செயற்படும் சட்டமாக இது இருக்கின்றது.

இது நீக்கப்படும் என்று இலங்கை அரசு தெளிவாக சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி கொடுத்துள்ளது. அவ்வாறு நீக்குவதற்கான முயற்சியும் சென்ற அரசின் காலத்தில் இடம்பெற்றுள்ளது. அது முழுமை பெறவில்லை. ஆனால், தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைச் சீர்திருத்துகின்றோம் என்று சொல்லி எந்தவித உப்புச்சப்பில்லாத ஒரு சீர்திருத்தமாக அறிவிக்கப்படுகின்ற ஒரு வர்த்தமானி பிரசுரம் வந்துள்ளது.

அது நடைமுறையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அமுலில் எந்த மாற்றத்தையும் செய்யப் போவதில்லை. ஆகவே, சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு – விசேடமாக ஐரோப்பிய ஒன்றியத்தை ஏமாற்றுவதற்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கின்றது; அவர்களையும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் இது செய்யப்படுகின்றது. அவர்கள் எல்லோருக்கும் விளக்கமாக விடயங்களை அறிவித்துள்ளோம்.

இந்தத் தருணத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என்று அரசு கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். அந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும் என்று எங்கள் மக்கள் நேரடியாகவே கோருகின்ற ஆவணத்தில் கையெழுத்திட்டு இதற்கான போராட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றோம்.

இது எட்டு மாவட்டங்களிலும் மக்களிடத்தில் வீடு வீடாகச் சென்று வீதி வீதியாகச் சென்று மக்களின் கையெழுத்து வாங்கி இன்று ஆரம்பித்து வைக்கின்றோம். தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி கையெழுத்துப் போராட்டத்தை மக்களிடத்தில் முன்கொண்டு செல்லவுள்ளது.

யாழில் நடைபெறுகின்ற மீனவர்களின் போராட்டத்தைக் கருத்தில்கொண்டு அந்தப் போராட்டம் ஒரு முடிவு வந்த பின்னர் கையெழுத்துப் போராட்டத்தை முழுவீச்சாகச் செயற்படுத்துவோம் – என்றார்.

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரு மீனவர்கள், படகு இயந்திரக் கோளாறு காரணமாக இந்திய எல்லைக்குள் சென்ற காரணத்தால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இருவரும் நேற்று படகுடன் விடுவிக்க ஏற்பாடாகியிருந்தது.

இதனிடையே தற்போது நிலவும் இந்திய – இலங்கை மீனவர்களிடையேயான முறுகல் நிலமையால் இரு மீனவர்களின் விடுதலையை ஒத்திவைக்குமாறு நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

## தடையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மறித்து இடம்பெறும் இந்தப் போராட்டத்துக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று மாலை தடை உத்தரவு விதித்தது. குறித்த தடை உத்தரவு கட்டளை பருத்தித்துறை பொலிஸாரால் போராட்டம் இடம்பெறும் இடத்தில் நேற்றிரவு 7 மணியளவில் வாசிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிமன்றத்தின் உத்தரவுக்கு மதிப்பளித்து வீதியில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் மீனவர்களால் அகற்றப்பட்டபோதும் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

போராட்டம் இடம்பெறும் இடத்தில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் கலகத் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்த் தேசத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழைப்பு விடுத்துள்ளது.

குறித்த போராட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது எமக்கான சுதந்திர தினம் அல்ல. எமக்கான நீதி கிடைக்கப் பெறாத இடத்தில் எவ்வாறு சுதந்திரம் கிடைக்கும்? பொது மக்கள் இந்த விடயத்தில் அலட்சியமாக இருக்காது ஒன்றுகூடி இந்தக் கறுப்பு நாளை அனுஷ்டிக்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினம் என்பதை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டித்து வந்துள்ளனர். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நாம் ஒன்றுபட்டு இன அழிப்பு நடந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலே எவ்வித அரசியல் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இல்லாமல் ஒன்றிணைய வேண்டும். இதில் மதகுருமார்கள், பல்கலைக் கழக மாணவர்கள், சிவில் சமூகத்தினர், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள், ஆசிரியர்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள், தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் என்பன பங்கேற்க வேண்டும். எமது இயக்கமும் இதற்கு பூரண ஆதரவை வழங்குகின்றது என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

ஒரேநாட்டிலேயே ஒருபுறம் ஆரவாரம், வெற்றிக்கொண்டாட்டம், மகிழ்ச்சி என்பன காணப்படும்போது இன்னொருபுறத்தில் கவலை, வறுமை, பொருளாதார பின்னடைவு போன்றன காணப்படுகின்றன. இதனை நாங்கள் இரண்டு நாளாக அனுஷ்டிக்கிறோம் என்று மெதடிஸ்த திருச்சபையின் அருட்திரு றொபேர்ட் சசிகரன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசுக்கு தமிழ் மக்களை ஒடுக்குவதற்காக கொடுக்கப்பட்ட அனுமதிப்பத்திரமே சுதந்திர தினமாகும். 1956 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தில் கறுப்புக் கொடி ஏற்றிய திருமலை நடராஜன் படுகொலையோடு உயிர்ப்பலி என்பது ஆரம்பித்துவிட்டது. தமிழ் இன ஒடுக்குமுறைக்கு நூறு வருடங்கள் கடந்துவிட்டன. சுதந்திரத்திற்கு முன்னர் அனுமதிப் பத்திரம் இல்லாமல் எம்மை ஒடுக்கினார்கள். சுதந்திரத்துக்குப் பின்னர் அனுமதிப் பத்திரத்துடன் நம்மை ஒடுக்குகிறார்கள் என்று சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இணைப்பாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் பிரச்சினை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சரியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டால் அடுத்த வருடங்களில் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க வேண்டிய தேவை இருக்காது. நாளை (இன்று) தனித்தனித் போராட்டங்களை முன்னெடுக்காமல் முள்ளிவாய்க்காலில் அனைவரும் அணிதிரண்டு வலுச்சேர்க்க வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் கறுப்பு உடையணிந்து அனைவரும் பங்கேற்க வேண்டும் என்பதுடன் வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.


# மரண அறிவித்தல்

மலர்வு 01 – 04 – 1939



உதிர்வு 02 – 02 – 2022

## திருமதி மகாலிங்கம் செல்லப்பாக்கியம்

யாழ்.கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், மயிலியதனை, கொம்மந்தறை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் செல்லப்பாக்கியம் அவர்கள் 02.02.2022 புதன்கிழமை அன்று அதிகாலை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், இரத்தினம் மகாலிங்கம் (சமாதான நீதிவான், முன்னாள் உபதலைவர், நகரசபை - வல்வெட்டித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், பரந்தாமன் (லண்டன், முன்னாள் உதவி விரிவுரையாளர், விலங்கியல் பீடம் – யாழ்/பல்கலைக் கழகம்), சுரேஷ் (லண்டன்), சுதாகரன் (தலைவர் - சுபரா நிறுவனம் லண்டன்), சுபத்திரா, சுமதி (ஆசிரியை - யா/சிதம்பரக்கல்லூரி) ஆகியோரின் பாச மிகு தாயாரும், சூரியகலா (லண்டன், முன்னாள் கணணி ஆலோசகர், L.B.N தொலைக்காட்சி நிலையம் - கொழும்பு), சுகந்தி (லண்டன்), துஷித்தா (கணக்காளர் - லண்டன்), சற்குணராசா (ஓய்வு பெற்ற வர்த்தக முகாமையாளர் - பருத்தித்துறை), விஜயகுமார் (பிரதி அதிபர் - யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பாலசிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராசா (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்), தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரிஷி (லண்டன்), ஷாலினி (லண்டன்), ஜெயனி (லண்டன்), சுவரன் (லண்டன்), அருண்ராஜ் (லண்டன்), அருண்ஜா, பிறேமிகன்(எமிறல் ஹாட்வயர் உடுப்பிட்டி), சுகந்திகா (ஆசிரியை யாழ் / கம்பர்மலை வித்தியாலயம் கொம்மந்தறை), காலஞ்சென்ற இந்துஜா, இந்துன், கீர்த்தனா (லண்டன்), பார்த்தீபன் (இரண்டாம் நிலை கப்பல் கப்டன்), அருண்ஜா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், கிருத்திவ் (லண்டன்), வினோஷென், ரித்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 02.02.2022 புதன்கிழமை அன்று நண்பகல் 12:00 மணியளவில் மயிலியதனையில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் நடை பெற்று பின்னர் மயிலியதனை ஊரிக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
பரந்தாமன் (மகன்) – 00447718867567
சுபத்திரா (மகள்) – 0779128793
சுரேஷ் (மகன்) – 00447568571117
சுதாகரன் (மகன்) – 00447947471529
சற்குணராசா (மருமகன்) – 0740356714
சுமதி ( மகள்) – 0770542908
விஜயகுமார் (மருமகன்) – 0740477369

தகவல்:
குடும்பத்தினர்.

# இல்லாத ஊருக்கு போகாத வழி

**அக்கரை / அக்கறை அலசல்**



**என்.சத்தியமூர்த்தி**

இனப்போருக்கு பிந்தைய ஆண்டுகளில், எப்போதெல்லாம் தமிழர் அரசியல் தலைமைக்கு தங்களது ஆளுமை மீது சந்தேகம் தோன்றுகிறதோ, அப்போதெல்லாம், சுய நிர்ணயம் மற்றும் சமஷ்டி குறித்து பேச துவங்கி இருக்கிறார்கள். அதுவே தற்போதும் நடைபெறுகிறது. இல்லையென்றால், அண்மை காலத்தில் அவர்கள் ஒரு தேர்தலை எதிர்பார்க்கின்றார்கள் என்று அர்த்தம். அதற்கான சாத்திய கூறுகள் தற்போது இல்லை. அதுவும் இல்லை என்றால், தமிழ் தேசிய கூட்டமைப்பு போன்ற ஓர் அரசியல் தலைமைக்கு உளளிருந்தே சவால் வருகிறது என்று முடிவு செய்து கொள்ள வேண்டும்.

தற்போது, அனைத்து தமிழ் கட்சியினரும் சேர்ந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தில் துவங்கிய கூத்து, இன்னமும் முடிந்தபாடில்லை. ஒன்று, இந்த மாதத்தில் ஜெனிவாவில் துவங்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்ட நிகழ்வுகளால் அது காணாமல் அடிக்கப்படும். அல்லது, அதனைத் தூக்கி அடித்து தன்னை முன்னிலை படுத்திக்கொள்ளும். இரண்டுமே தமிழர்களின் அரசில் பிரச்சினைகளுக்கோ, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்கோ தீர்வல்ல.

எது எப்படி என்றாலும், பிரச்சினை அவர்கள் கூறுவது போல், பதிமூன்றாவது திருத்தம் சார்ந்தது அல்ல. மாறாக, ஜெனிவாவில் இந்தியாவின் நிலைமையைக் கட்டிப்போடத் தான், மேலை நாடுகளின் தூண்டுதலில் தற்போதைய நிலைமை ஏற்பட்டுள்ளதோ என்று எண்ணத்தோன்றுகிறது. ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் முன்வைத்த பதிமூன்றாவதிற்கான அழுத்ததையும் தாண்டி, பதினான்கிற்கும் மேல் என்ற நிலைமையை தோற்றுவித்த பிறகு, தமிழர் தலைமைகள், இந்தியாவை தங்கள் அஜெண்டா அல்லது நிகழ்சி நிரலில் கட்டிப்போட நினைப்பதற்கான காரண – காரியங்கள் தார்மீகமாகத் தோல்வி அடைந்துவிட்டது எனலாம். தமிழர் சார்ந்த இந்தியாவின் சமகால கரிசனைகள் எல்லாம், மனிதாபிமானத்தினாலும், கடந்த கால உறவுகளாலும் மட்டுமே நிலைத்திருக்கிறது.

**இந்தியா கவலை அடைய...**

எது எப்படியோ, ரெலோ பிள்ளையார் சுழிபோட்டுதுவங்கிவைத்தபிரச்சினையே தற்போது தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திற்கு கூட வழி வகுத்துள்ளது எனலாம். இன்னும் சொல்லப்போனால், தமிழ்தேசிய கூட்டமைப்பின் மோடிக்கான கடித்தத்தை விதண்டாவாதமாக பதிமூன்று சார்ந்த வேண்டுகோளாக திரிபு செய்து ஓர் ஊர்வலத்தையும், அதனைத் தொடர்ந்து பொது கூட்டத்தையும் நடத்த முடிவு செய்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே, அதே ஞாயிற்றுகிழமை வவுனியாவில் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூடுவதற்கான புண்ணியத்தையும் கட்டிக்கொண்டது.

முன்னணியின் கூட்டத்தில் பதிமூன்றை ஆதரிப்பவர்களைத் துரத்தி அடிக்க வேண்டும் என்று கஜேந்திரகுமார் கூறினார். அறைகூவல் விடுத்தார் என்பது அதை விடப் பொருந்தும். தொடர்ந்து பின் தள்ளப்பட்டு வந்த வவுனியா கூட்டம், தமிழரசு, கட்சி தலைவர் மாவை சேனாதிராஜாவையும், ரெலோவையும் தாக்கியதை தவிர, வேறு எதனையும் சாதித்தாகத் தெரியவில்லை. அதற்கான அவசியமும் இருக்கவில்லை. காரணம், கூட்டத்திற்கு சில தினங்களுக்கு முன்னர்தான், இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வுகுறித்ததனதுநிலைபாட்டை, கூட்டமைப்பின் தீர்மானமாகவே மாற்றி, தமிழரசு, இந்திய பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் கையெழுத்திட்டிருந்தது.

இதில், மோடிக்கான கடிதத்தில், சில குயுக்திகளை கையாண்டதாக சுமந்திரன் குற்றம்சாட்டும்சுரேந்திரன் குருசாமியைக் குறை சொல்வதா, அல்லது, அதனை வவுனியா கூட்டத்தில் பெரிதுபடுத்திய சுமந்திரனையே சொல்வதா, என்று தெரியவில்லை. இவர்கள் நினைப்பது போல், இந்திய அரச மட்டத்தில், இந்த கடிதத்தை மேலோட்டமாகப் படித்தால் மட்டுமே, குறிப்பிடப்பட்ட தவறுகள் நிகழ வாய்ப்பு உள்ளது.

ஆனால், இந்தியப்பிரதமர்கண்ணுக்கு அந்த கடிதம் போய் சேருவதற்கு முன்னர், இந்திய தூதுவர் கோபால் பாக்லேயும், புது டெல்லியில் வெளியுறவு துறை அதிகாரிகளும் அதனை அலசியிருப்பார்கள். அதன் அடிப்படையில், சிறிய குறிப்பும் எழுதியிருப்பார்கள். அவற்றை சேர்ந்தே பிரதமர் மோடி வாசிப்பார். கடிதத்தின் பின்னால், இந்தியாவையும், பிரதமர் மோடியையையும் முன்னிலைபடுத்தி, இங்கு அடிக்கப்பட்ட கூத்துகளும் அவரது கவனதிற்குக் கொண்டு செல்லப்படும். குறிப்பாக, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக தமிழர்களைச் சுற்றி, கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகள் செய்த அரசியல் இந்தியாவை கவலையுறச் செய்யும் விடயம்.

**இரட்டை குதிரை சவாரி**

ஆனால், தமிழர் தீர்விற்கான பிரச்சினையே தலைமைகள் தங்கள் மக்கள் முன்னும் சர்வதேச சமூகத்தின் முன்னும் வைக்கும் முடிவு திட்டங்கள்தான். கூட்டமைப்பு, சுய நிர்ணயம் மற்றும் சமஷ்டி அடிப்படையிலான தீர்மானத்தை கோருகிறது. கஜன் பொன்னம்பலம், சுய நிர்ணயம் பற்றி மட்டுமே கவலை படுகிறார். சிறிய கட்சிகள், காலதிற்கு ஏற்ப தங்களது சமரசமற்ற நிலைபாட்டில் சிலசில சமரசங்களை செய்து கொள்கிறார்கள். அவையெல்லாம், காலத்தின் கட்டாயம்.

இதில், கூட்டமைப்பின் சுய நிர்ணயம் மற்றும் சமஷ்டி சார்ந்த கோரிக்கைகள, இல்லாத ஊருக்கு வழி சொல்வதாக இருக்கிறது. சமஷ்டி இல்லையென்றால் சுய நிர்ணயம் என்பது ஒரு விடயம். சமஷ்டி மற்றும் சுய நிர்ணயம் என்பது பிறிதொரு விடயம். இரண்டில் ஒன்றே செயல்படுத்த தகுந்தது. இரண்டும் சேர்ந்து அல்ல. இது, இந்த முடிவுகளை முன்வைக்கும் தமிழ் தலைமைகளுக்கு தெரியாத விடயமல்ல. அப்படியானால், ஏன் இந்த இரட்டை குதிரை சவாரி செய்ய ஆசை? அவ்வாறான நிலையில், குதிரை குப்புற தள்ளுவது போதாது என்று குழி பறிக்கவும் செய்யும் என்பதும் அவர்கள் அறியாததா?

கூட்டமைப்பு கூறி வருவது போல, சுய நிர்ணயம் மற்றும் சமஷ்டி என்பன, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் அல்ல. அவை ஒரு காந்தத்தின் இரு துருவங்கள். ஒன்று இருந்தால், மற்றொன்று இருக்காது. தேவையும் இல்லை. அந்த விதத்தில், கூட்டமைப்பின் வாதம், விதண்டாவாதமே தவிர வேறொன்றும் இல்லை.

எப்பொழுது தமிழர் தரப்பு. குறிப்பாக கூட்டமைப்பு வகையாறா, சமஷ்டி கோருகிறதோ, அப்போதே அங்கு சுய நிர்ணய உரிமைக்கு வேலை இல்லை. சமஷ்டி என்பது தற்போது வழக்கத்தில் இருக்கும் ஒற்றையாட்சி முறைக்கு எதிர்மறை எனலாம். இன்னும்சொல்லப்போனால்,சமஷ்டி அமைப்பு என்பதே, ஐக்கிய இலங்கை சார்ந்த விடயம். எப்போது, தமிழர் தரப்பிற்கு சுய நிர்ணய உரிமை கிடைக்கிறதோ, அப்போதே அது ஐக்கிய இலங்கை சார்ந்த விடயங்களுக்கு அங்கே இடமே இல்லை.

காரணம், ஐக்கிய இலங்கையில், தமிழர்கள் மட்டும் நிலைத்தால், போராடினால், அல்லது போரிட்டால் மட்டுமே, சமஷ்டி அரசை பெற்று விடமுடியாது. இது சரித்திர உண்மை. அவ்வாறு விடுதலை புலிகள் போராடி, சுயாட்சியும் கிடைக்கவில்லை, தனி நாடும் கிடைக்கவில்லை, சுய நிர்ணய உரிமையும் கிடைக்கவில்லை என்பது எல்லாம் வேறு விடயம்.

அதே சமயம், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அமைப்பு என்பது, தமிழர் மட்டும் நினைத்தால் அனுபவிக்கும் விடயமல்ல. அவ்வாறிருந்தால், இத்தனை போராட்டங்கள் தேவையில்லை. மாறாக, சமஷ்டி அமைவதற்கு, சிங்கள – பௌத்த பெரும்பான்மை உள்ள நாடாளுமன்றம், மூன்றில் இரண்டு என்ற பெரும்பான்மையில் நாட்டின் அரசியல் யாப்பை மாற்ற வேண்டும். பின்னர் அதனை சிங்களவரின அதிக பெரும்பான்மையின் உதவியுடன், தேசிய வாக்கெடுப்பில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். இதில், சொல்லாலும், செயலாலும், தமிழர் பங்களிப்பு என்பது, சிங்கள அரசியல் மற்றும் சமூக தரப்புகளின் மனமாற்றத்திற்கு வழி செய்வதோடு நின்று விடுகிறது.

மாறாக, சுய நிர்ணயம் என்பது, இலங்கையில் இருந்து தமிழர் பகுதிகள் பிரிந்து போக வேண்டும் என்ற சூழல் அமைந்தால் மட்டுமே அர்த்தமுள்ளதாக இருக்கும். உள்ளக சுய நிர்ணயம் என்று அரசியல் செய்வதெல்லாம், வெற்றுவேட்டு. காரணம், தங்களுக்கான அரசியல் அமைப்பை தமிழர்கள் மட்டுமே முடிவு செய்ய முடியும் என்றால், அங்கு இலங்கையின் யாப்பு அர்த்தமற்றதாகி விடும். அது, தமிழர் தரப்பின் நோக்கில் சரியா, தவறா என்பதல்ல பிரச்சினை. அது செயல்படும் திட்டமா, இல்லையா, என்பதே கேள்வி. எப்போது சிங்கள – பௌத்த அரசியல் கட்சிகள் மற்றும் சமுதாயத்தை ஒட்டியே சுய நிர்ணய உரிமை அல்லது சமஷ்டி அமைப்பிற்கான செயல்முறை நிலைநிற்கிறதோ, அப்போதே அவை சார்ந்த தமிழர் சார்புக் கோங்கள், வெறும் கோங்கள் என்று ஆகி விடுகின்றன.

இதனால்தான், கூட்டமைப்பும் சர்வதேசத்தை அண்டி, அடுத்தடுத்து ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. ஆனால், அந்த அழுத்தங்கள் எல்லாம் ஓர் அளவிற்கு மட்டுமே பயன் கொடுத்து வந்துள்ளன. உண்மைஎன்னவென்றால், அத்தகைய அழுத்தங்களால், சிங்கள அரச மற்றும் அரசியல் தலைமைகளின் மனதை வேண்டுமென்றால், சர்வதேசம் மாற்றி விடலாம். ஆனால், சிங்கள மக்களின் மனவோட்டத்தை சர்வதேசத்தால் மாற்றிவிட முடியாது.

இந்த உண்மையை உணர்ந்ததால் தான், சிங்கள – பௌத்த அரசியல் தலைமைகளும் தமிழர் கோரிக்கைகளுக்கும், சர்வதேச அழுத்தங்களுக்கும் இடம் வழங்குவதில்லை. இதில், ராஜபக்ஷாக்கள் ஒரு புறம், சந்திரிகா அம்மையார், ரணில் போன்ற பிறர் மற்றொரு புறம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர்களும் தமிழர் தலைமைகள் போல், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். தமிழர் தலைமைகளை போலவே, அவர்கள் எல்லோருமே கூட, சிங்கள மக்களின் அபிலாஷைகளை மட்டுமே பிரதிபலிக்க முடியும்.

என்ன, அவர்களில் சிலர் நுனி நாக்கு ஆங்கிலத்தில், தங்களது நிலைமையை சர்வதேசத்திற்கு எடுத்துரைப்பார்கள். அவர்களை (சர்வதேசத்தை) தங்கள் பக்கத்திற்குத் திருப்பவும் முயற்சி செய்வார்கள். ராஜபக்ஷாக்கள் போன்றோர், தாங்கள் அறிந்த குறைபாடான ஆங்கிலத்தில் அதனை வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்ற வகையில் கூறி முடிப்பார்கள். அவர்கள், தென்னிலங்கை வாக்குகளுக்கு மட்டுமே அரசியல் செய்கிறார்கள். பிறரை போல, தமிழர் வாக்குகளுக்காக அடிபோடுவதில்லை. சர்வதேச அளவில் தங்களுக்குப் பதவிகள் காத்திருப்பதாக நினைத்து எதனையும்எதிர்பார்க்கவில்லை. ஆனால், தமிழர் தரப்பை பொறுத்த வரையில், இரண்டிலும் இறுதி முடிவு என்பது ஒன்று தான்.

**உள் உணராத மன நோய்**

சிங்கள – பௌத்த அரசியல்வாதிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் எண்ணிக்கை அளவிலேயே பெரும்பான்மையினர். தங்களது எண்ணம் மற்றும் மனத்தளவில் சிறுபான்மையினரே. தமிழர் தரப்பு, எண்ணிக்கை அளவிலேயே, சிறுபான்மையினர். ஆனால், மனத்தளவில், செயலளவில், பெரும்பான்மையினர் போலவே நினைத்து அதிகார தோரணையுடனே செயல்பட்டு வந்துள்ளனர். உண்மையான பெரும்பான்மையிரை அவர்கள் அன்றாடம் பேச்சிலும், செயலிலும் மட்டம் தட்டி வந்துள்ளனர்.

ஐம்பதுகளின் மத்தியில், சிங்களம் மட்டும்சட்டம்செயல்பாட்டிற்கு வருவதற்கு முன்னர், நாடெங்கும் வியாபித்திருந்த தமிழ் அரச அலுவலர்கள், சிங்களவரை, நாகரீகம் அறியாத அறிவீலிகளாகவே, காடையர்களாகவேநினைத்துசெயல்பட்டு வந்துள்ளனர். அந்த மனநிலையை, தற்போதைய தமிழர் தலைமுறையினரிடமும் திணித்து விட்டனர். அதன் எதிர்மறையே, சிங்களவர் மத்தியிலும் நிகழ்வில் இருக்கிறது. இரண்டுமே நாட்டை பிடித்து, பீடித்து. இன்னமும் விலகாத துரதிர்ஷ்டமே. இதற்கான மருந்தோ, விடையோ சர்வதேசத்திடம் இல்லை. அரசியல் யாப்பிலும், அதில் முன்னெடுக்கப்படும் மாற்றங்களிலும் இல்லை.

மாறாக, இது ஒரு மன நோய். தங்களுக்கு இந்த நோய் இருப்பதையே இரு சாராரும் உணர்ந்தாரில்லை. அதனை உணர்ந்து, மாற்றங்கள் கொண்டு வரும் நிலையிலும் அவர்களது மன நிலை இல்லை. அதன் விளைவே, தொடர்ந்து வரும் இரு இனத்தவர்களுக்கும் இடையேயான, சேர்ந்து பயணிக்க முடியாத இடைவெளி. அதனை மாற்ற முடியாது என்பதல்ல வாதம். அதனை மாற்றுவதற்கான, மன மாற்றத்தை இரு தரப்பினரும், புரிந்து, ஏற்றுக் கொண்டு செயல்படத் துவங்க வேண்டும். அதற்கு, நேரம், காலம்பார்க்கவேண்டியதில்லை. ஆனால், நேரமும் காலமும் கூட எப்போதும் காத்திருப்பதில்லை.

**வெறும் கோஷம்**

வெறும் கோஷங்களால், தமிழர் தரப்பு தங்களது கோரிக்கைகளுக்கு வலு சேர்க்க முடியும். ஆனால், அதற்கான தீர்வை பெற முடியாது. மாறாக, அந்த கோஷங்களினால் ஏற்படும் பாதிப்புகளைச் சரியாக எடைபோட்டு செயல்பட்டால் மட்டுமே, அவர்களை சிங்கள அரசியலும், அரசும் கூட சீரியஸாக எடுத்துக் கொள்வார்கள். இல்லையென்றால், ஒன்றில் ராஜபக்ஷாக்கள் போன்று. எடுத்தேன், கவிழ்தேன் என்று ஒரே போடாகப் போடுவார்கள். சர்வதேசத்தை பற்றி கவலை பட மாட்டார்கள். இல்லையென்றால், ரணிலை போல் அழகாக, பேசியே, தங்கள்வழியில்சென்று, கடைசியில் கவிழ்த்து விடுவார்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# சிலப்பதிகாரத்தில் இசைத்தமிழ்




தமிழர்களின் கலைக்கருவூலமாக திகழும் சிலப்பதிகாரம் சங்க மருவிய காலப்பகுதியில் கி.பி 3 – 6 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிக்குள் இளங்கோ அடிகளால் பாடப்பட்டது. இது கற்புடைத் தெய்வமாகிய கண்ணகியின் பெருமைகளையும், சேரன் செங்குட்டுவனின் பெருமைகளையும் எடுத்து கூறும் வகையில் அமைந்திருந்தாலும் தமிழர் கலைகள் – குறிப்பாக இசைக்கலை, கூத்துக்கலை பற்றிய விடயங்கள் – நூல் முழுவதும் விரவிக் காணப்படுகின்றன. இது குறித்து முனைவர் பொன்.சௌரிராசன் கூறுகையில் ‘அவர் காலத்து மறைந்து கொண்டிருந்த, மறக்கடிக்கப்பட்டு கொண்டிருந்த தமிழ் மொழியை, தமிழ் கூத்தை, தமிழ் இசையை, தமிழ் பண்பாட்டை, தமிழ் நாட்டுப்புற கதையை சிறப்பாக தமிழரை வாழ்விக்க வேண்டும் என்பது அவரது குறிக்கோள். அவர் அரசை துறந்தார். ஆனால் தமிழை, தமிழரை, தமிழ் கலையை, தமிழ் மண்ணை மறக்க முடியாமல் ஆங்காங்கே நினைவு கூருகிறார்’ என்றார்.

இவ்வகையில் தமிழர் கலைகளை வாழ்விக்க எழுந்த சிலப்பதிகாரத்தில் தமிழரின் இசைக்கலை, இசைக்கருவிகள், நாட்டார் இசை வடிவங்கள், ஐந்நிலங்களுக்கும் உரிய இசை பற்றி கூறப்பட்ட கருத்துக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிலப்பதிகாரம் புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் எனும் மூன்று காண்டங்களைக் கொண்ட உரையிடையிட்ட பாட்டுக்களாக அமையப்பெற்றுள்ளது. இது குறித்து இளங்கோ அடிகளே ‘நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்’ என்றார். சிலம்பின் அமைப்பு அதில் கலைகள் குறித்து கூறப்பட்டுள்ள அனைத்தினையும் நன்கு பருகி உணர்ந்த பாரதியார் ‘நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்’ என்றார். அந்த வகையில் சிலம்பில் இசைக் கலை பற்றிக் கூற வந்த பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை இசைபற்றியும் நாடகம் பற்றியும் பல விடயங்கள் சிலப்பதிகாரத்தில் உள்ளமை பலரும் அறிந்ததே, இக்காவியத்தாலும் இதன் உரையாலும் முற்காலத்தில் வழங்கிய இசையையும் நாட்டியத்தினையும் புத்துயிர் பெற செய்வதற்கு தமிழிசை இயக்கம் 1942 இல் தொடக்கம் பெற்றது’ என்கிறார். தொடர்ந்து ரங்க ராமானுஜ ஐயங்கார் ‘சிலப்பதிகாரமும் தேவார பாசுரங்களும் திவ்யபிரபந்தமுமே இராகங்களை அவற்றுக்குரிய திட்டமான வடிவத்தில் நமக்கு காட்டுகின்ற மூல நூல்களாகும்’ என கூறுகிறார். இவற்றிலிருந்து தமிழரின் இசைக்கலையின் தொன்மையை அறிவதற்கு சிலப்பதிகாரம் தக்க சான்றாக விளங்குகின்றமையை நன்குணர்ந்து கொள்ள முடிகின்றது.

### இசைக்கலை

பண்டைக்காலம் தொட்டு மனிதன் தன் உணர்வுகளை வெளிப்படுத்தவும் பொழுது போக்கிற்காகவும் மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தவும் இசையினைக் கையாண்டு வந்துள்ளான். அந்த வகையில் தமிழன் இசையில் ஏனையோருக்கு முன்னோடியாக இருந்துள்ளான் என்பற்கு ஆதாரமாக சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இசையின் அடிப்படையான சுர வரிசைகளாக குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை, உழை, தாரம் என்ற ஏழும் தற்போது வழங்கிவரும் ஸ,ரி,க,ம,ப,த,நி என்ற ஏழு ஸ்வரங்களுக்கும் இணையானவை யாக அமைந்துள்ளமை குறிப்பிடதக்கது. இவற்றில் குரல், இளி, துத்தம், விளி, கைக்கிளை என்ற ஐந்தும் இணைந்து மோகனம் என்ற அழகிய பண்ணை உருவாக்குகின்றன. ஏழிசையும் தமிழர்களுடைய ஆ,ஈ,ஊ,ஏ,ஐ, ஓ,ஔ என்ற ஒலிகளுக்கு இணையானவை. இவை முறையே மயில், மாடு, ஆடு, கிரவுஞ்சப்பறவை, பஞ்சமம், குதிரை, யானை என்பவை எழுப்பும் இசையை ஒத்தவை, எனவே இசையானது இயற்கையோடு இணைந்தே வளர்ந்து வந்துள்ளது. சுரங்களுக்கிடையான உறவு முறை பற்றிக் கூற விளைந்த சிலம்பு காலம், பருவம், சமயம், பொருள் என்பனவே பண்களுக்கிடையான உறவாகும் என்பதனை வேனிற்காதையில்


**‘இணை கிளை பகை நட்பென் றிந் நான்கு
இசை புணர் குறிலை யெய்த நோக்கு’**
(32 – 33) என்றார்.

மாதவியின் ஆசிரியன் பற்றி கூறும் போது ஆடலுக்கேற்ப பாடலும்,பாடலுக்கேற்ப தாளமும் இசைக்க வல்லோனாகவும், இசை மரபுக்கேற்ப சுரஸ்தானங்களை அறிந்து பாட்டிடை வந்து கலந்திடாவண்ணம் காத்திடும் நாவன்மை மிக்கவன் என்பதனை அரங்கேற்றக்காதையில்

**‘இசையோன் வக்கரித்துவிட்டதை உணர்ந்து
ஆங்கு
அசையா மரபின் அதுபட வைத்து’**
(41,42) கூறியுள்ளார்.

இதனூடாக இசையினை மிக நுட்பமாக பழம் தமிழர் வளர்த்து வந்தமையினை அறியக் கூடியதாகவுள்ளது.

இருவகை தாளங்களான கச்சபுட முதலான பஞ்ச தாளத்தினையும் அரை மாத்திரையுடைய ஏக தாளத்தினையும் சிலப்பதிகாரம் அரங்கேற்றகாதையில் மாதவி தன் நடனத்தின் போது பஞ்ச தாள பிரபந்தமாக கட்டப்பட்ட வடுகிலொத்தையையும் வடுகு மட்டதாளம் முதலாக ஏக தாளம் முடிவாக உள்ள



கூத்து முறைகளையும் ஆடினாள்

**‘ஆறும் நாலும் அம்முறை போக்கி
கூறிய ஐந்தின் கொள்கை போலப்;’ (154 -155)**


எனக் கூறுவதனூடாக தமிழர் இசையின் தாளங்களினை பற்றி அறிய கூடியதாக உள்ளது.

கொட்டு, அசை, தூக்கு, அளவு எனும் நான்கு வகை தாள ஒலிகளையும் தாளங்களின் வழி வரும் செந்தூக்கு, மதலைதூக்கு, துணிபுதூக்கு, கோயிற்தூக்கு, சிவப்புதூக்கு, கழாற்தூக்கு, நிவப்புதூக்கு, நெடுந்தூக்கு என்பவற்றினையும் பதினாறுவகை கூத்துக்கும் உரிய தாளங்களினையும் சிலப்பதிகாரம் அரங்கேற்ற காதையில் –

**‘ஆடலும் பாடலும் பாணியும் தூக்கும்
கூடிய நெறியில் கொத்தும் காலை ‘ (16 - 17)**

எனக் கூறியுள்ளதிலிருந்து பண்டைத் தமிழர் இசை பற்றிய ஆழ்ந்த புலமையினைக் கொண்டிருந்தனர் என்பதனையும் ஏனையோர்க்கு முன்னோடியாக இருந்துள்ளனர் என்பதனையும் அறியக் கூடியதாகவுள்ளது.

சிலம்பில் இசையில் வல்லோர்கள் வாழ்ந்து வந்தமையும் இவர்கள் இசைக்காகத் தங்களை அர்ப்பணித்து இருந்தமையையும் அறிய கூடியதாக உள்ளது. இவர்கள் பாணண், பாடினி, விறலி என்று அழைக்கப்பட்டமையையும் அறியகூடியதாக உள்ளது.



**ஏ.ரஜிதா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.)**

# பஸ்சிமோதாசனம்

வாரம் ஓர் ஆசனம்



**செய்(படி)முறைகள்:**

1. இரு கால்களையும் நீட்டி நேராக நிமிர்ந்து உட்காரவும். பாதங்கள் இரண்டும் இணைந்திருக்கத் தக்கவாறு உள்ளங்கைகளை புட்டப்பகுதியின் இருபுறமும் தரையில் வைத்திருக்க வேண்டும். (இவ்வாசனத்தை மல்லாந்து படுத்தபடியும் செய்யலாம்)

2. இரு கைகளையும் பக்கவாட்டாக தோள்களுக்கு மேலாக முழங்கைகள் வளையாமல் மூச்சை இழுத்தவாறு நன்றாக உயர்த்தவும். இரு புஜங்களும் காதுகளைத் தொடுமாறு வைத்திருக்க வேண்டும். உள்ளங்கைகள் முன் நோக்கியதாக இருக்க வேண்டும்.

3. மூச்சை வெளிவிட்டபடி (கைகளை காதுகளுடன் அணைத்தவாறு) முன்பக்கமாக குனிந்து இரு கால் பெருவிரல்களையும் கைவிரல்களால் கொழுவிப் பிடிக்கவும். பின்னர் படிப்படியாக முன்னால் குனிந்து நெற்றியை முழங்காலின் மீது பதியுமாறு வைத்து ஆழமாகச் சுவாசிக்கவும் – உச்சநிலையில் ஆழமாக 08 சுவாசங்கள் வரை சுவாசிக்கலாம். இந்த நிலையில் முழங்கைகளை மடிக்கலாம். கால்களை மடிக்கக்கூடாது.

4. பின்னர் கால்விரல்களை விடுவித்து மூச்சை இழுத்தவாறு நேராக நிமிர்ந்து 2 ஆம் நிலைக்கு வரவும்.

5. பின்னர் மூச்சை வெளிவிட்டவாறு கைகளை மெதுவாக கீழேவிட்டு உள்ளங்கைகளை தரையில் வைத்து ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள்:** ஆசனத்தின் உச்ச நிலையில் உடலின் பின்புறம் காலில் இருந்து கழுத்து வரை நன்கு நீட்டப்படுகின்றது. வயிற்றுப்பகுதி நன்றாக நசுக்கப்படுகிறது. உடம்பின் பின்புறம் முழுவதும், வயிற்றின் முன்புறம் உள்ள தசைகளும் நன்கு இழுக்கப்பட்டு வலுவடைகின்றன. உடலிலுள்ள நரம்புகள், தசைகள், வலுவடைகின்றன. இடுப்புப் பகுதியிலுள்ள ஊழைச்சதைகள் மற்றும் தேவையற்ற கொழுப்புகள் கரைக்கப்படுவதால் நல்ல தோற்றப் பொலிவையும் உடலுக்கு அளிக்கின்றது. கல்லீரல், பித்தப்பை, மண்ணீரல், கணையம், குடல்கள் முதலிய வயிற்றுப் புறத்தில் அமைந்துள்ள சகல உறுப்புக்களும் சிறுநீரகங்களும் நன்கு வேலை செய்கின்றன. ஜீரணசக்தி அதிகரிக்கும், மலச்சிக்கல், வயிற்றுக் கோளாறுகள், இடுப்பு வலி, முதுகு வலி, மூலநோய், மற்றும் இனப்பெருக்கத் தொகுதியுடன் சம்பந்தமான நோய்கள் முதலிய பிரச்சினைகளுக்கு சிறந்த ஆசனமாகும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

# நல்லை கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

உந்தனை நாடி நாடி சிந்துகள் பாடி பாடி
வந்துனை தேடி தேடி - தொழவேதான்
தந்துய ரோடி ஓடி வெந்திடு மாறு மாறு
முந்தருள் வாரி வாரி - தருவேலா
செந்தமி ழூறி யூறி சந்தமுள் பாட லாகி
சின்னடி மீது சூட - அருளாயோ?
சுந்தர வேலி னோடு பங்கிரு மாதரோடு
வந்தழ கான வீதி - வருவோனே
வந்தடி நோவ நோவ உன்திரு வீதி நாடி
பந்தம தாகி யாகி - யுருள்வோர்கள்
கொண்டுள ஆசை யாவு முன்னரு ளால கூடி
இந்நில மீது சேர - அருளாயோ?
நுந்தம ரான தேவர் தந்துயர் மாள மாள
நின்திரு வேலை வாரி - விடுவோனே
நந்துயர் வாட வாட முன்வினை ஓட ஓட
நல்லையை மேவி வாழு - பெருமானே!

**- கவிஞர் இராசையா குகதாசன் -**

காலைக்கதிர்
Kalaikkathir

# சுதந்திரதினத்தைப் புறக்கணிக்க உள்ளார் என கர்தினால் தெரிவிப்பு



சுதந்திரதின விழாவை இன்று புறக்கணிக்கவுள்ளார் என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பொரளை தேவாலய கைக்குண்டு வழக்கு மற்றும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் உள்ள குறைபாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவ்வாறு எதிர்ப்பு தெரிவிக்கப்படவுள்ளதாகக் கொழும்பு பேராயர் தொடர்பு பிரிவு உறுப்பினர் அருட் தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று (வியாழக்கிழமை) ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த அவர், சுதந்திர தினத்தன்று வழமையாக மேற்கொள்ளும் சேவையை இரத்துச்செய்ய கர்தினால் ரஞ்சித் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பொரளை தேவாலய கைக்குண்டு விவகாரத்தில் அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று ஆதாரம் இருந்தும், தேவாலயத்தின் பாதுகாவலர் ஏன் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது தொடர்பாகத் நாங்கள் கலக்கமடைந்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவாலயத்தின் பராமரிப்பாளருக்காக எதிர்பார்க்கப்பட்ட ஏனைய சந்தேக நபர்கள் அனைவரும் சமீபத்தில் விடுவிக்கப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச நாணய நிதியத்திடம் ஆதரவைக் கோரிய இலங்கை!

### மத்திய வங்கி ஆளுநரின் அறிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனை பெறப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தமது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வேறு காரணங்களுக்காக ஆலோசனை கோரப்படவில்லை எனவும் இதுவொரு வழமையான செயற்பாடாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளும் பொருட்டு, சர்வதேச நாணய நிதியத்திடம் தொழில்நுட்ப ஆதரவைக் கோரியுள்ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதற்கிணங்க நிபுணத்துவ குழுவொன்று விரைவில் இலங்கை வரவுள்ளதாக அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாத் துறையை மேம்படுத்த 6 ஆயிரம் இடங்கள் அடையாளம்

நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் 6 ஆயிரம் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மேலும், அடையாளம் காணப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

மேலும், சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரும்போது சுற்றுலாத் தளங்கள் தொடர்பாகவும் அறிந்துகொள்ளும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

## வவுனியாவில் 'ஒரு லட்சம் பணிகள்' வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு!




வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் 'ஒரு லட்சம் பணிகள்' எனும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் வவுனியா காத்தார் சின்னக்குளம் பகுதியிலும் இந்த நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் சமுர்த்தி பயனாளிகளுக்கான வாழ்வாதாரத் திட்டத்துக்கான உறுதிக்கடிதம் வழங்கிவைக்கப்பட்டதுடன், 20 லட்சம் ரூபா பெறுமதியான கிராம சேவகர் அலுவலகக் கட்டடத்துக்கான அடிக்கல்லும் இதன்போது நாட்டப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் எ.சரத்சந்திர, பிரதேச செயலாளர் நா.கமலதாசன், பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

## மேலும் 460 பேர் பூரண குணம்!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வந்த மேலும் 460 பேர் பூரண குணமடைந்துள்ளனர் எனத் தொற்று நோய் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் தொற்றுக்கு உள்ளானவர்களில் 5 லட்சத்து 79 ஆயிரத்து 780 பேர் இது வரை பூரணமாகக் குணமடைந்துவெளியேறினர்.

## இலங்கைக்கு 20 கோடி டொலர்களை பாகிஸ்தான் கடனாக வழங்குமாம்?

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்ற ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை திருப்பிச் செலுத்தும் வகையில், இலங்கைக்கு 20 கோடி டொலர் பெறுமதியான கடனை வழங்க பாகிஸ்தான் தயாராகி வருறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக பாகிஸ்தான் ஊடகங்களை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஒரு பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்திய பின்னர், அரிசி மற்றும் சீமெந்து கொள்வனவு செய்வதற்கு இலங்கைக்கு 20 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க அந்நாடு எதிர்பார்த்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ பீட மாணவர் மீது தாக்கு: இராஜாங்க அமைச்சரின் மகன் கைது!

களனி பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நால்வர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

23 வயதான சந்தேக நபர் நேற்று இரவு சட்டத்தரணி ஊடாக ராகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பாக மொத்தம் ஏழு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராகம மருத்துவ பீட மாணவர்கள் மீது நேற்று (புதன்கிழமை) அதிகாலை வெளி குழுவினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவத்தில் நான்கு மாணவர்கள் காயமடைந்துள்ள நிலையில், மூன்று மாணவர்கள் ராகம வைத்தியசாலையிலும் மற்றுமொருவர் நீர்கொழும்பு வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக




பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு வாகனங்களில் வந்த 15 பேர் கொண்ட குழு இந்த தாக்குதலை நடத்தியதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக களனி பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் 2 விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இல்லாத ஊருக்கு .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

போருக்குப் பிந்தைய பத்தாண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில், கூட்டமைப்புத் தலைவர்கள், சிங்களவர் பகுதிகளில் பயணம் செய்து, தாங்கள் விடுதலை புலிகளின் வாரிசுகள் அலற்ற என்பதை அந்த மக்களை நம்ப வைத்திருக்க வேண்டும். துப்பாக்கிக் கலாச்சாரத்தில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் புரிய வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருக்க முடியும். அதிலும் குறிப்பாக, முந்தைய மைத்திரி- ரணில் காலத்தில், ஆட்சியாளர்களின் ஆதரவும் அனுசரணையும் கூட அவர்களுக்கு கிடைத்திருக்கும். ஆனால், அதனை அவர்கள் செய்யவில்லை.

மாறாக, வழக்கம் போலவே, தமிழர் அரசியல் என்ற குண்டு சட்டிக்குள் மட்டுமே, அவர்கள் தங்களது சுய நிர்ணயம் - சமஷ்டிக் குதிரைகளை ஓட்டி வந்துள்ளனர். அவர்களை பொறுத்த வரையில், ஒன்றில் யாழ்பாணம் மற்றும் கொழும்பு. இல்லையென்றால், ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா. இடைபட்ட காலத்தில், இந்தியாவையும், புது டெல்லியையும் கூட அவர்கள் மறந்து விட்டார்கள். அவர்களுக்கு எங்கே அம்பந்தோட்டையும், மாத்தறையும், கண்டியும், அனுராதபுரமும் கண்ணில் தெரியப் போகிறது!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2022இல் வெளியிடப்பெற்றது.